[1970 ஆகஸ்ட் 27

Malaria Eradication Programme

* 64 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether World Health Organisation has been doing the "Malaria Eradication Programme" in Madras City?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மலேரியா ஒழிப்புத் திட்டம் பயனுள்ள திட்டம். இதிலே பணிபுரிகிறவர்கள் பல ஆண்டுகளாக வேலை நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். இந்த இலாகா வைச் சீரமைப்பு செய்வதுபற்றி திட்டம் ஏதேனும் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த இலாகாவைச் சீரமைப்புச் செய்யும் திட்டத்தை அரசு இப்போது மேற்கொண் டிருக்கிறது. ஐந்தாண்டு, ஆறாண்டு காலம் என்று வேலை பார்த்து வருகின்றவர்களை எல்லாம் நிரந்தரமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இயக்குநரிடம் கூறப்பட்டு அதற்கான நடைமுறைகளை ஆராய்ந்து வருகிறார்கள். விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. கே. போஜன் : உலக சுகாதார நிலையம் சென்னை நகரில் மலேரியா ஒழிப்பு நல்ல முறையில் நடைபெற்றிருக்கிறது என்று சொன்னாலும் சென்னை மாநகரத்தில் கொசுக்கள் அதிகமாக இருப்ப தால் மாநில சுகாதாரத் துறை நடவடிக்கை எடுத்து கொசுக்களை ஒழிக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மலேரியா கொசு ஒழிப்பைப் பொறுத்தவரை தமிழக மாநிலம் முன்னணியில் இருக் கிறது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். மலேரியா ஒழிப்பைப் பொறுத்தவரை உலக சுகாதார அமைப்பினரால் பாராட்டத்தக்க அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு மலேரியாவி னால் ஏற்படும் இறப்புகள் கூட ஒரு சதவிகிதத்திற்கும் கீழே போகும் நிலை இருக்கிறது. வேறுபல கொசுக்களைப் பற்றி மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கொசுக்கள் மருந்துக்கு ஏற்றவகையில் தங்களை மாற்றிக் கொண்டு விடுகின்றன என்று சொல்லப்படுகிறது. ஏற்கனவே இருந்த மருந்தை மாற்றி வலிமை வாய்ந்த மருந்தைப் பயன்படுத்தி அந்தக் கொசுக்களையும் ஒழிப்பதற்கான முயற்சிகளை எடுப்பதில் இப்போது சுகாதாரத் துறையினர் ஈடுபட்டு வருகிறார்கள்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியன் : மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் கீழ் வேலை செய்யும் ஊழியர்கள் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து அவர்கள் வேலை நிலைகளை ஒழுங்குபடுத்த ஆராய்ச்சி நடந்து கொண்டு இருக்கிறது என்று சொன்னார்கள். நாலைந்து ஆண்டுகள் பணிபுரிந்த பிறகும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கும் நிலையில் மேலும் தாமதம் கூடாது என்பதால் **அவர்**

1970 ஆகஸ்ட் 27]

களுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் நிரந்தரமான வேலை கிடைக்கும் என்ற உத்தரவாதத்தை அரசாங்கம் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : விரைவில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று குறிப்பிட்டேன். அத்துறையில் பெரும்பாலான இடங்கள் ஒழிக்கப்பட்டு வந்திருக்கிறது. இருந்தாலும் அந்த இலாகா முழுவதையும் எடுத்து விடுவதற்கும் இல்லை. மேலும் மலேரியா படை எடுக்காமல் பாதுகாக்கவும் வேண்டும். ஆகவே அதற்கு எவ்வளவு ஊழியர்கள் தேவைப்படும் என்று கணக்கெடுத்து அதில் இருப்பவர்களைச் சுகாதாரத் துறையோடு இணைந்த வேறு பல துறைகளில் பயன்படுத்தலாமா என்று கணக்கு எடுக்க சொல்லப்பட்டிருக்கிறது. அதில் ஐந்தாறு ஆண்டுகள் பணி புரிந்தவர்களை நிரந்தரமாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் முயற்சி எடுக்கப்படுகிறது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : மலேரியா ஒழிப்புத் திட்டத்தின்கீழ் அல்லது வேறு எந்தச் சிறப்புத்திட்டத்தின்கீழாவது சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிகளில் உள்ள கொசுக்களை ஒழிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பொதுவாகச் சுகாதார சீர்நிலை குறித்து சென்னை நகரைப் பொறுத்து அதைக் கார்ப்பரேஷன் மேற்கொண்டிருக்கிறது. ஏதாவது தனிப்பட்ட முறையில் கொசுக்கள் அதிகமாகி வருகிறது என்றால் பக்கத்திலுள்ள கூவம் நதியை சீரமைப்படுத்துகிற காரணத்தால் அதிலுள்ள தண்ணீரைக் கிளப்புவதனால் சில பல சூழ்நிலைகள் ஏற்படக்கூடும். அது விரைவில் சீரமைக்கப்பட்ட பிறகு இந்தக் கெடுதல் அறவே இல்லாமல் போகும். தக்க நடவடிக்கைகளை சுகாதார இலாகாவினரும், மாநகராட்சி சுகாதாரத் துறையினரும் எடுத்து வருகிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த இலாகாவைச் சீரமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த இலாகாவில் நாலைந்து ஆண்டுகளாகத் தற்காலிகமாக பணி புரிந்து வருகின்றவர்களுக்கு வேலை உறுதி அளிக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றித்தான் முதலில் குறிப்பிட்டேன். சில பல வேலைகளுக்கு ஆட்களை எடுத்துக் கொள்ளும்போது அவர்களுக்கெல்லாம் நிரந்தர வேலை கொடுக்கப்படுமென்று உறுதி அளிக்க முடியாது. சில பல வேலைகள் பரவலாக மேற்கொள்ளப்படும்போது தாற்காலிகமாகத்தான் நியமிக்கப்படுவார்கள். ஆனால் சில பேர்கள் தாற்காலிகமாக ஆறு ஏழு ஆண்டுகள் தொடர்ந்து பணி புரிகிறபோது நிலையாகத் தேவைப்படுகிற சூழ்நிலை ஏற்படும்போது அவர்களை நிரந்தரமாக்கிவிட்டால் என்ன என்ற கருத்து இருந்து வருகிறது. வேறு

பல துறைகளில் இவர்களை எந்த அளவிற்கு ஈர்த்துக் கொள்ளலாம் என்ற கணக்கின் அடிப்படையில்தான் அவர்களை நிரந்தரமாக்க முடியும். வேலை தரும்போது நிரந்தரமாக எடுத்துக் கொள்வோம் என்ற உறுதி தருவதற்கில்லை. முதலில் தற்காலிகமாகத்தான் எடுக்க வேண்டியிருக்கிறது.

Prevention of Food Adulteration Act

* 65 *Q.*—Thiru C. GOVINDARAJAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the Government propose to extend the Prevention of Food Adulteration Act to Neyveli Township?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : நெய்வேலி டவுன்ஷிப்பில் ஒரு லட்சத்திற்கும் மேல் ஜனத்தொகை பெருகியிருக்கிறது மட்டுமல்ல, ஏற்கெனவே இந்த உணவுப்பண்டங்கள் எல்லாம் கூட்டுறவு ஸ்டோர்ஸ் மூலம் விநியோகிக்கப்பட்டு வந்தது. இப்போது அது தனியார் துறைக்கு விடப்பட்டிருப்பதால் பால், எண்ணெய் எல்லாவற்றிலும் கலப்படம் அதிகமாயிருப்பதால் இந்தச் சட்டத்தை அங்கு விஸ்தரிக்க அரசு விரைவில் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நெய்வேலி ஒன்றியப் பகுதியைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டம் சட்டமாக நடைமுறையில் கொண்டுவரப்படவில்லை. ஆனால் நெய்வேலி கார்ப்பரேஷன் பகுதியைப் பொறுத்தவரையில் இது அமலில் இருந்து வருகிறது. பக்கத்திலுள்ள கம்மாபுரம் பஞ்சாயத்து யூனியன் ஹெல்த் இன்ஸ்பெக்டர் திங்கள்தோறும் நான்கு சாம்பிள்கள் அனுப்ப வேண்டுமென்ற அடிப்படையில் அனுப்ப நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். நெய்வேலி ஒன்றியப் பகுதி முழுவதிலும் இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தவேண்டுமென்றால் ஒன்றியப் பகுதியினர் இந்தச் சட்டத்தை அமல் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட தீர்மானத்தை அவர்கள் அனுப்பி வைத்தால் அரசு அதைப்பற்றிக் கவனிக்கும். மேலும் பல ஒன்றியப் பகுதிகளில் எல்லாம் இச்சட்டத்தை அமல் படுத்த வேண்டுமென்று கோரிக்கைகள் வருகின்றன. விரைவில் கோவையில் இந்தப் பொருள்களை ஆராய ஆராய்ச்சிக்கூடம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. விரைவில் அது முடிந்த பிறகு இக்கோரிக்கைகள் எழுப்பப்பட்டுள்ள எல்லா இடங்களையும் அங்கீகரிப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : இந்த உணவுக் கலப்படத்திற்கு முக்கிய காரணமாக உள்ள பெரிய மொத்த வியாபாரிகள் இதற்கான தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் அதை வாங்கி விற்கிற சில்லறை வியாபாரிகள் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய ஒரு ஆபத்தும் இப்போது இருக்கிறது. ஆகவே கலப்படத்திற்கு முக்கிய காரணமாக உள்ள மொத்த வியாபாரிகள் தண்டனை